**MINUTES OF PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED PROJECT OF M/S. R.CHEMPAKADEVI ROUGH STONE AND GRAVEL QUARRY, SF.NO. 44/1(P), 44/5(P), 44/6, 44/7 & 44/8, SUNDAKOTTAI VILLAGE, ARUPPUKOTTAI TALUK, VIRUDHUNAGAR DISTRICT ON 15.02.2024, 11.00 A.M AT M/S.SATHYA MAHAL, 1/117A, ARUPPUKOTTAI - SAYALGUDI MAIN ROAD, M.REDDIAPATTI - 626118, ARUPPUKOTTAI TALUK, VIRUDHUNAGAR DISTRICT**

**Present:**

**Thiruvalargal:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Thiru.P. Vallikannu | : | Revenue Divisional Officer<br>Aruppukottai. |
| 2 | Er.G. Ramaraj | : | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar. |
| 3 | Er.D.M. Krishnababu | : | Assistant Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar. |

Public, Project proponent 87 Nos (List enclosed)

The public hearing under EIA Notifications, 2006 for the proposed project of M/s. R.Chempakadevi at SF.No. 44/1(P), 44/5(P), 44/6, 44/7 & 44/8, Sundakottai Village, Aruppukottai Taluk, Virudhunagar District was held at M/s.Sathya Mahal, 1/117A, Aruppukottai - Sayalgudi Main Road, M.Reddiapatti - 626118, Aruppukottai Taluk, Virudhunagar District. The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar welcomed the Revenue Divisional Officer, Aruppukottai, other government officials, all general public and project proponents who have attended the public hearing. He informed that the public notices informing the conduct of Public Hearing was published in "Dinathanthi" and "The New Indian Express" on 10.01.2024. He also informed that wide publicity was given about the conduct of public hearing by

circulating pamphlets in the nearby villages of the project site. Further, he stated that the arrangements for the public hearing had been done as per the guidelines issued under EIA Notification, 2006. Subsequently, the District Environmental Engineer stated that the project proponent will make a detailed presentation on the proposed project and requested the public to express their views after completion of the presentation. He added that the written complaints would also be received.

He also stated that the views, suggestions and queries of the public will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority, Tamilnadu.

The Revenue Divisional Officer, Aruppukottai initiated the Public Hearing process. After that, the District Environmental Engineer requested the project proponent to explain about their proposed project.

Then, the Environmental consultant of the project has made detailed presentation on the project of M/s R. Chempakadevi Rough Stone and Gravel Quarry to the public along with Environmental Management Plan.

After that, the public has furnished their views with respect to the project as follows –

Thiru.Nethaji, Tamilnadu Farmers Welfare Association, Usilampatti:

He informed that, 40 years ago, water available in canal in this area was in drinking condition. However, now ground water level was gone very deep and became very salt. He also informed that the stones have property to hold water and due to destroyment of canals, lot of species were became extinct and human race will also have possible to extinct. He further informed that the quarry operations in Dindigul area is one of the reason for earthquake in that area.

He further informed that in Chempakadevi quarry report, there are lot of violations as per the Minor Mineral Rules, 1959 and wrong informations are mentioned. As per Minor

Mineral Rules, 1959, these should not be any houses within 300 meters from the quarry lease area. But, houses are available around the proposed quarry at a distance of 50 meters in northern side at S.F.No.44/4, 50 meters in western side at S.F.No.45/3, 230 meters in western side at S.F.No. 3/12B, 155 meters on South eastern side. These details are available on FMB sketch and google map, hence he requested that no permission should be given to this quarry.

He further informed that only 10 meters safety distance left instead of 50 meters for the canal located on southern side of the quarry. He also informed that there should not be any water bodies within 500 meters and no high voltage EB line within 300 meters from the quarry lease area. Further, the project proponent has not submitted 35 documents, out of 45 mandatory documents for obtaining Environmental Clearance.

He also informed that the existing quarries are not carrying out air & noise survey, not maintaining the proper work timings, utilizing more explosive than authorized quantities, not providing green belt and fencing. Further, he told that the village roads are getting damaged due to overloading of quarrying vehicles.

He further told that the proponent has not furnished details of locations & electrical connection utilized for of air survey carried out, mining plan of other quarries in the cluster and hydrological study in the draft EIA prepared. He requested that the quarries should carried out muffle blasting and NONEL explosives.

He finally told that no permission should be granted to the quarry, as lot of information were hide out in the report.

<u>Thiru.Madhanlogesh, Bommakottai:</u>

He told that more number of quarries are under operation for long periods in this area, which affects the envionment of this area and most of the water bodies are not there now. He

told that the waste water generated from quarrying activities are being let out in Kanmoi. He also told that the public hearing meeting should be conducted in Bommakottai instead of here. He further told that the quarries are carrying out blasting operations 5 to 6 times daily, and three houses were collapsed due to the same in last one year period. He also told there will not be any agricultural field in ten years period, if this scenario continued. He finally recorded that no quarry is needed.

Thiru.A.Rangasamy, Muthuramalingapuram:

He told that Muthuramalingapuram is located at 1.9 km from the proposed quarry and having 3000 families. He requested to allot Rs.110 Lakhs for plantation of 6000 number of trees along the vehicle route. He also requested to maintain the village road, not to let out waste water into Kanmoi, to allot Rs.25 Lakhs for air quality monitoring near old temple in Muthuramalingapuram and to form "local monitoring committee" for monitoring of quarry operations. He also requested that quarry should carry out muffle blasting only. He also told that the proponent should allot Rs.26 Lakhs for CER activity by considering actual asset of quarry as Rs.13 crores. He finally requested that these requests should be included in the final report of EIA and shall be included as conditions in Environmental Clearance and consent of Tamilnadu Pollution Control Board.

Thiru.Gnanasekaran, Vadipatti, Madurai:

He told that there are lot of quarries in his native place and quarries are carrying out blasting activities without maintaining any time schedules. He told that village road are getting affected due to overloading of quarry vehicles. Manual quarrying were being carried previously and now it become mechanized, hence there is no possiblility for employment. He also told there are no boards are provided regarding public hearing meeting and no women are participated in this meeting. He further told that the quarries are not following provisions of the Minor Mineral Rules, 1959 and ground water is getting affected due to quarry waste

water, which affects health of local people and requested the Government officials to investigate the same. The proponents are not monitoring the vibrations and also told that the depth of quarry proposed is more than the depth of neaby wells and quarry operations causes air pollution. Hence, it is not correct to issue permission to this quarry. The expired quarries should provide fencing around its lease area and quarries are operating without permission and during night times, which causes revenue loss to the Government. The quarries should operate as per rules & regulations of the Government.

Thiru.Veerapandian, Rajapalayam:

He informed that the Environmental Acts & Environmental Impact Assessment notifications were established to control unregularized quarrying and to promote the scientific mining. He also told that there are, both advantages and disadvantages in quarry operations. He told that the dust emission and flying stones can be controlled by muffle blasting.

After small commotion, he further told that charnockite rocks have property to control water seepage and green belt should by developed to control air and noise pollution. He also told this proposed quarry will give direct employment to 10 (ten) persons and indirect employment to 50 (fifty) persons and he welcomed the project.

Thiru.Selvaraj, Melur, Madurai:

He told that he previously worked in stone quarries and Melur area is the most affected area due to quarries. He also told that most of the quarries are not following the provisions of the Minor Mineral Act, 1959 and the public hearing meetings are conducted only for name sake. He further told that there are more employment opportunities available other than quarries and both central & state government are alloting various funds for the improvement of village panchayat. He told that no quarries are monitoring the vibrations induced due to blasting, which causes earthquake & increase in temperature. He informed that the existing

quarries are not provided fencing, green belt and display board. He also informed that huge revenue loss occurs to government due to un-authorized mining activities. He requested to conduct digital and drone based surveys in quarries. He also told that the proponents are not submitting all the documents required for obtaining Environmental Clearance and overloading of vehicles causes damage to village road and air pollution. He requested the electrical usage details for air monitoring carried out by proponent. He further told that the proposed depth of quarry in 100 feet, which is more than depth of nearby well, which is only 50 feet and this will lead to water scarcity. He also told that the quarries are not using NONEL explosives or muffle blastings and told that there are lot of wrong information submitted in draft EIA and there are some houses located nearer to the quarry are not marked in the map. He also mentioned now that survey conducted during March 2023 to May 2023, while ToR is granted only on August 2023. He requested to conduct public Hearing meetings in local village of quarry and told that the proposed quarry violated the norms prescribed in Minor Mineral Rules, 1959 such as there should not be any houses within 300 meter from lease area and safety distance to nearby odai shuld be 50 meter. He finally told permission to the quarry should not be granted due to the above said violations.

Thiru.N.Vasudevan, Bommakottai:

He told that he is Bommakottai panchayat Ex-vice president and a farmer. He told that there is a possibility for air pollution in Bommakottai, Kalayar karisalkulam, K.Meenakshipuram, Muthuramalingapuram and Kallurani due to the proposed quarry. He also told the quarry operation affects the studies of school children and requested not to grand permission to the quarry.

He further told the no green belt provided in existing M/s.T.R.V Pavithra Rough Stone Quarry located in S.F.No.48. He also informed that the existing quarries in that area such as , M/s.T.R Varadharajan quarry in S.F.No.53&48, Balasubramani quarry in S.F.No.72,

Thiruvappu quarry in S.F.No.64 to 67, Subbareddiyar quarry in S.F.No.46, Sundharamoorthy quarry in S.F.No.29 are utilizing high effective explosives, which causes smoke & vibrations and requested to cancel their licences. He also told that the solid wastes & waste water generated in quarries are being dumbed in kanmoi located in S.F.No.33, which causes water quality deterioration and reduction of area of extend of kanmoi. He finally told that water catchment area are encroached by laying road to quarry and hence no permission should be given to any existing and new quarries.

Thiru.Pothiraj, Krishnapuram:

He told that if no permission is given to this quarry, then all the quarries in Virudhunagar district should be closed. He also told that Ramco industry is carrying out limestone mining over an extent of 150 acres and land value getting increased and quarry is necessary for both road laying and construction related works.

Thiru.Vijayaraj, Kanjanayakkanpatti:

He told that he is coming from agriculture family and having 10 acres of agricultural land. He also told that he is working as driver in the quarry for more than 20 years. He told that their livelihood will get affected, if no quarry is available and told that permission should be given to the quarry.

Tmt.G.Vijayalakshmi, Bommakottai:

She told that no actions are taken on the complaints filed against the quarry operations. She told that the village road and her agriculture land (S.F.No.547 and 548) is getting affected due to the dust emission and flying stones from the quarry operation and vehicle movement. She also told that vibrations are felt in houses due to blasting, which are being carried out without proper time schedule. She finally told that quarry operations are affecting air, water and people and requested not to give permision to the quarry.

Thiru.Joyal, Kalayar Karisalkulam:

He told that Minerals are a necessary one, but the water bodies required for agriculture is not properly maintained. He also told that the government could not able to recover the encroached water bodies. He further told that agriculture is the most important requirement for the nation and permission to the quarry should be given by following rules and regulations strictly.

Tmt.Karpagavalli, Savvaspuram:

She told that she is working in the proponent's industry and her father is working in the quarry and staying in the quarters provided by the industry. She told that this is their livelihood. She also told quarry operation is not affecting in her sister's agricultural land, which is located near to quarry in Pandalgudi area, She told that it would be good, if permission granted to the quarry.

After that, since no one came forward to give view on the project, the Revenue Divisional Officer, Aruppukottai invited the public to offer their further more views if any. Even after that, no one came forward to give any opinion. Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar has narrated the proceedings of the public hearing conducted. He also thanked all and requested to furnish their views if any in written and 62 numbers of petitions were received in person.

With this, the meeting came to the end.

22.2.2024

District Environmental Engineer,
Tamilnadu Pollution Control Board,
Virudhunagar

Revenue Divisional Officer
Aruppukottai,
Virudhunagar District.

**Enclosures:**

1. Copy of Attendance Register (Total 7 – pages, 87 persons)
2. Videograph of public hearing meeting (CD format)
3. Copy of Public Notices (both Tamil & English).

**விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், சுண்டக்கோட்டை கிராமம், புல எண்கள்: 44/1(P), 44/5(P), 44/6, 44/7 & 44/8 -ல் உத்தேசிக்கப்பட்டுள்ள திரு. ஆர். செண்பகாதேவி உடைகல் குவாரி தொடர்பாக 15.02.2024 முற்பகல் 11.00 மணியளவில் திரு. சத்யா மஹால், 1/117A, அருப்புக்கோட்டை - சாயல்குடி மெயின் ரோடு, எம்.ரெட்டியாபட்டி - 626118, அருப்புக்கோட்டை வட்டம், விருதுநகர் மாவட்டத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் குறிப்புகள்.**

**பங்கேற்றோர்:**

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு. P. வள்ளிக்கண்ணு, | : | வருவாய் கோட்டாட்சியர், அருப்புக்கோட்டை |
| 2 | பொறி. கு. இராமராஜ் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விருதுநகர். |
| 3 | பொறி.து.மு.கிருஷ்ணபாபு | : | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விருதுநகர். |

பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலை பிரதிநிதிகள் 87 நபர்கள்
(பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)

அருப்புக்கோட்டை வட்டம், சுண்டக்கோட்டை கிராமம், புலஎண்: 44/1(P), 44/5(P), 44/6, 44/7 & 44/8 -ல் உத்தேசிக்கப்பட்டுள்ள திரு. ஆர். செண்பகாதேவி உடைகல் குவாரி நிறுவனத்திற்கு, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையின் கீழ் சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்காக, பொதுமக்களின் கருத்தினை அறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் திரு. சத்யா மஹால், 1/117A, அருப்புக்கோட்டை - சாயல்குடி மெயின் ரோடு, எம்.ரெட்டியாபட்டி - 626118, அருப்புக்கோட்டை வட்டம், விருதுநகர் மாவட்டத்தில் 15.02.2024 முற்பகல் 11.00 மணியளவில் துவங்கியது. மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விருதுநகர் அவர்கள் கூட்டத்திற்கு வருகை புரிந்த வருவாய் கோட்டாட்சியர், அருப்புக்கோட்டை, ஏனைய அரசு அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலையின் பிரதிநிதிகள் அனைவரையும் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விபரம் குறித்து

ஏற்கனவே "தினத்தந்தி" மற்றும் "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 10.01.2024 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். இப்பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம், நடத்துவது தொடர்பாக பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்கள் மூலம் விரிவாக விழிப்புணர்வு ம்ற்றும் அறிவிப்பு செய்ததைக் கூறினார். இந்த கூட்டத்திற்கான ஏற்பாடுகள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கை 2006ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

இத்திட்டம் தொடர்பாக தொழிற்சாலை பிரதிநிதி விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் தங்களது கருத்துக்களைத் தெரிவிக்கலாம் எனக் கேட்டுக்கொண்டார். எழுத்துப்பூர்வமாக கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புபவர்களும் அதனை வழங்கலாம் எனத் தெரியப்படுத்தினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக நடைபெறும் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கைகள் வீடியோகிராபி மூலம் பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் குறிப்புகளுடன் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் எனத் தெரிவித்தார்.

பிறகு, வருவாய் கோட்டாட்சியர், அருப்புக்கோட்டை அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தினை துவக்கி வைத்தார். பின்பு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தொழிற்திட்டம் குறித்து விளக்குமாறு தொழிற்சாலை பிரதிநிதியைக் கேட்டுக்கொண்டு, அதன்பின் பொதுமக்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கலாம் என்று கூறினார்.

அதன்பின் தி/எ்.ஆர். செண்பகாதேவி உடைகல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் ஆலோசகர், இத்திட்டம் தொடர்பாகவும் மற்றும் இது தொடர்பான சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் விளக்கவுரையாற்றினார்.

பின்னர், இக்கூட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட தொழிற்திட்டம் குறித்து வாய்மொழியாக பொதுமக்களால் வழங்கப்பட்ட கருத்துக்கள் பின்வருமாறு:

திரு. நேதாஜி, தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கம், உசிலம்பட்டி:

திரு.நேதாஜி அவர்கள், 40 வருடங்களுக்கு முன் இப்பகுதியில் ஓடையில் தண்ணீர் குடிக்கும் அளவு இருந்ததாகவும், தற்பொழுது நிலத்தடி நீர் அதிக ஆழத்துக்கு சென்று விட்டதாகவும், நீரில் உப்புத்தன்மை அதிகரித்து விட்டதாகவும் தெரிவித்தார். கற்கள் என்பது நீரை சேகரிக்கும் அமைப்பாக இருப்பதாகவும், ஓடைகளை அழிப்பதால் பல்லுயிர் பெருக்கும் அழிந்து விடுவதாகவும், மேலும் மனித உயிர்கள் அழியும் அபாயம் இருப்பதாகவும் தெரிவித்தார். திண்டுக்கல் பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டதற்கு, அப்பகுதியில் உள்ள கல் குவாரிகளின் செயல்பாடுகளே காரணம் எனவும் தெரிவித்தார்.

மேலும், அவர் கூறுகையில் செண்பகாதேவி குவாரி அறிக்கையில் சிறு கனிம சலுகை விதிகள், 1959 பிரிவு 36(1) மற்றும் 36(1)(a) ஆகியவற்றில் கூறப்பட்டுள்ள விதிகளில் மீறல்கள் உள்ளதாகவும், தவறான தகவல்களை சமர்ப்பித்துள்ளதாகவும் கூறினார். சிறு கனிம விதிகளின் படி, 300 மீட்டருக்குள் வீடுகள் இருந்தால் குவாரிக்கு அனுமதி அளிக்க கூடாது எனவும், ஆனால் இக்குவாரிக்கு வடக்கு பகுதியில் 50 மீட்டர் தொலைவில் புல எண்.44/4 லும், மேற்கு பகுதியில் 50 மீட்டர் தொலைவில் புல எண் 45/3 லும், மேற்கு பகுதியில் 230 மீட்டர் தொலைவில் புல எண் 3/12B லும், தென்கிழக்கு திசையில் 155 மீட்டர் தொலைவிலும் வீடுகள் இருப்பதாக FMB வரைபடத்திலும், கூகுள் வரைபடத்திலும் இருப்பதாகவும், அதனால் இக்குவாரிக்கு அனுமதி அளிக்க கூடாது எனவும் கூறினார்.

குவாரிக்கு தென்புறத்தில் உள்ள ஓடைக்கு விதிமுறைப்படி 50 மீட்டர் பாதுகாப்பு இடைவெளி விடவேண்டிய நிலையில், 10 மீட்டர் மட்டுமே விட்டுள்ளதாகவும் கூறினார். மேலும், சிறு கனிம விதிகளின் படி, குவாரி அமைவிடத்திற்கு 500 மீட்டருக்குள் குளம், ஏரி, கண்மாய் ஆகியவை இருக்க கூடாதெனவும், 300 மீட்டருக்குள் மின் அழுத்த

கம்பிகள் இருக்க கூடாது எனவும் தெரிவித்தார். மேலும், குவாரி சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அனுமதிக்கு தேவையான 45 ஆவணங்களில், 35 ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை எனவும் கூறினார்.

மேலும், ஏற்கனவே உள்ள குவாரிகளில் காற்று மற்றும் ஒலி மாசு ஆய்வுகள் செய்யப்படுவதில்லை என்றும், வேலை நேரங்களை முறையாக பின்பற்றுவதில்லை என்றும், அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிக வெடிகளை உபயோகப்படுத்துவதாகவும், முறையான பசுமை அரண்களை அமைக்கவில்லை என்றும் தெரிவித்தார். அதே போல் எந்தஒரு குவாரியிலும் கம்பி வேலிகள் அமைக்கப்படவில்லை என்றும் கூறினார். மேலும், குவாரிகளில் இருந்து செல்லும் லாரிகளில் அதிகளவு பாரம் ஏற்றி செல்வதால் கிராம சாலைகள் பாதிப்படைவதாகவும் கூறினார்.

அதை தொடர்ந்து கூறுகையில், நிறுவனம் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் காற்று ஆய்வு செய்யப்பட்டுள்ள இடத்தின் விபரங்களையும், அதற்கு உபயோகப்படுத்தப்பட்ட மின் இணைப்பு விபரங்களையும், அருகிலுள்ள குவாரிகளின் "சுரங்கத் திட்டங்களையும்", நீரோட்டங்கள் குறித்த ஆய்வு விபரங்களையும் சமர்ப்பிக்கப்படவில்லை எனத் தெரிவித்தார்.

குவாரிகள் செயல்படும் பொழுது சத்தம் குறைவான நாணல் (NONEL) வெடிகளையும், தூசி பறக்காதபடி கட்டுப்படுத்தப்பட்ட (Muffle) முறையில் குவாரிகள் செயல்பட வேண்டும் எனவும், லாரிகளில் தார்பாலின் போர்த்தி கொண்டு செல்ல வேண்டும் எனவும் கூறினார்.

கடைசியாக, மேற்கண்டவாறு பல தகவல்களை மறைத்து அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதால், இக்குவாரிக்கு அனுமதி அளிக்க கூடாது எனக் கேட்டுக் கொண்டார்.

திரு.மதன்லோகேஷ், பொம்மகோட்டை:

திரு.மதன்லோகேஷ் அவர்கள், இப்பகுதியில் குவாரிகள் பல காலமாக இயங்கி வருவதாகவும், அதனால் பல்வேறு பாதிப்புகள் ஏற்படுவதாகவும், இப்பகுதியில் நீராதாரங்கள் ஏதும் தற்பொழுது இல்லை எனவும் கூறினார். மேலும், குவாரி செயல்பாட்டின் போது உருவாகும் வெடிபொருட்கள் நிறைந்த நீரானது கண்மாய்களில் விடப்படுவதாகவும் கூறினார். மேலும், இக்கருத்து கேட்பு கூட்டத்தை பொம்மக்கோட்டையில் நடத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். இக்குவாரிகள் ஒரு நாளைக்கு 5 முதல் 6 முறை வெடிகள் வெடிப்பதாகவும், அதனால் கடந்த ஒரு வருடத்தில் மூன்று வீடுகள் இடிந்துள்ளன எனவும் கூறினார். மேலும், இந்நிலை தொடர்ந்தால், 10 கிலோ மீட்டர் தொலைவிற்கு விவசாய நிலங்களே இருக்காது எனவும் கூறியதுடன், குவாரி வேண்டாம் எனக் கேட்டுக்கொண்டார்.

திரு.A.ரங்கசாமி, முத்துராமலிங்கபுரம்:

திரு.A.ரங்கசாமி அவர்கள் பேசுகையில், முத்துராமலிங்கபுரம் பகுதியில் 3000 குடும்பங்கள் இருப்பதாகவும், இக்குவாரிகளில் இருந்து 1.9 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளதாகவும் கூறினார். மேலும், அவர் கூறுகையில் லாரிகள் செல்லும் பாதைகளில் 6000 மரங்கள் நடுவதற்கென ரூ.110 லட்சங்கள் ஒதுக்க வேண்டுமெனவும், இப்பகுதியில் உள்ள கிராம சாலைகளை முறையாக பராமரிக்க வேண்டுமெனவும், குவாரி செயல்பாட்டில் உருவாகும் வெடி கலந்த நீரை கண்மாயில் விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமெனவும், இங்குள்ள பழைமையான பெருமாள் கோவில் அருகே காற்று தர கண்காணிப்பு அமைப்பு ரூ.25 லட்சத்தில் அமைக்க வேண்டுமெனவும், இங்கு அதிக குவாரிகள் இருப்பதால் "உள்ளூர் கண்காணிப்பு குழு" அமைப்பை உருவாக்க வேண்டுமெனவும், கட்டுப்படுத்தப்பட்ட முறையில் குவாரிகளில் வெடிகள் வெடிக்க வேண்டுமெனவும், இத்திட்டத்தின் உண்மையான மதிப்பாக ரூ.13 கோடி என மதிப்பீட்டு அதில் ரூ.26 லட்சத்தை சுற்றுச்சூழல் மேம்பாட்டுக்கென ( CER) ஒதுக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். மேலும், இந்த வேண்டுகோள்களை

அவர்களது இறுதி அறிக்கையில் சேர்க்க வேண்டும் எனவும், இந்த வேண்டுகோள்களை "சுற்றுச்சூழல் அனுமதி" மற்றும் "தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய இசைவாணை" ஆகியவற்றில் நிபந்தனைகளாக சேர்க்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

திரு.ஞானசேகரன், வாடிப்பட்டி, மதுரை:

திரு.ஞானசேகரன் அவர்கள், தன்னுடைய ஊரில் அதிகளவில் குவாரிகள் இருப்பதாகவும், அங்கு குறிப்பிட்ட நேரம் என்று ஏதுமின்றி எல்லா நேரங்களிலும் வெடி வெடிப்பதாக கூறினார். முறையாக வேலை நேரத்தை கடைபிடிப்பதில்லை எனவும், லாரிகளில் 10 டன் அளவிற்கு மேல் பாரமேற்றி செல்வதால் கிராம சாலைகள் பாதிப்படைவதாகவும் கூறினார். குவாரிகளில் முன்னர் கையினால் உடைத்து வேலை செய்ததாகவும், தற்பொழுது அனைத்தும் இயந்திரமயமானதால், வேலை கிடைப்பதென்பது அரிதான்து எனக்கூறினார். கருத்து கேட்பு கூட்டத்தில் பெண்கள் பெருமளவில் கலந்து கொள்ளவில்லை என்றும், கூட்டம் நடைபெறுவது தொடர்பான அறிவிப்பு பலகைகள் ஏதும் வைக்கப்படவில்லை எனவும் கூறினார். வெடி வெடிக்கும் போது, குவாரிகள் சிறுகனிம விதிகளை பின்பற்றுவதில்லை என்றும், வெடி மருந்து கலப்பதால் நிலத்தடி நீர் பாதிப்படைவதாகவும், அதனால் உடல்நல குறைபாடு ஏற்பட வாய்ப்புள்ளது என்றும் தெரிவித்து, அரசு அதிகாரிகள் இதை பார்வையிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். மேலும், குவாரி செயல்பாட்டினால் ஏற்படும் அதிர்வின் அளவை கண்காணிப்பதில்லை என்றார். குவாரியின் அனுமதிக்கப்பட்ட ஆழமானது, அருகில் அமைந்துள்ள கிணற்றை விட ஆழமாக இருக்கிறது என்றும், குவாரி செயல்பாட்டினால் காற்று மாசு ஏற்படுகின்றது என்றும், அதனால் இதற்கு அனுமதி அளிப்பது தவறானது என்றார். அனுமதி காலம் முடிந்த குவாரிகளில் கம்பி வேலி அமைக்கப்படவில்லை என்றும், அனுமதி இல்லாமலும், இரவு நேரங்களிலும் குவாரிகள் இயங்குகின்றன என்றும், ஆகையால் அரசிற்கு வரி வருவாய் இழப்பு ஏற்படுவதாகவும் கூறினார். குவாரி செயல்பாட்டினால் யாருக்கும் பயன் இல்லை எனவும், குவாரிகள் சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு செயல்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

திரு.வீரபாண்டியன், இராஜபாளையம்:

திரு.வீரபாண்டியன் அவர்கள், முறையற்ற குவாரி செயல்பாடுகளை கட்டுப்படுத்தவும், அறிவியல் பூர்வமான குவாரி செயல்பாட்டை கொண்டு வரவும் சுற்றுச்சூழல் விதிகளும், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கையும் ஏற்படுத்தப்பட்டதாக கூறினார். இது மிகச்சிறிய குவாரி என்றும், குவாரி தொழிலினால் நன்மையும், பாதிப்பும் ஏற்படும் என்றும், ஆகையால் கட்டுப்படுத்தப்பட்ட முறையில் வெடி வெடிப்பதால் அதிர்வுகளையும், பறக்கும் கற்களையும் தவிர்க்கலாம் எனக் கூறினார்.

அப்பொழுது ஏற்பட்ட சிறு சலசலப்புக்கு பின் மீண்டும் அவர் பேசுகையில், சார்னகைட் (Charnockite) வகை கற்கள் நீர்க்கசிவை கட்டுப்படுத்தும் எனவும், தூசி மற்றும் ஒலி மாசை கட்டுப்படுத்த மரம் வளர்க்க வேண்டும் எனவும் தெரிவித்தார். இக்குவாரியினால் 10 பேருக்கு நேரடியாகவும், 50 பேருக்கு மறைமுகமாகவும் வேலை கிடைக்கும் என்றும், கனிம வள நிதி கிடைக்கும் என்றும் கூறியவர், குவாரியினால் ஏற்படும் நன்மைகளை வரவேற்பதாகவும் தெரிவித்தார்.

திரு.செல்வராஜ், மேலூர், மதுரை:

திரு.செல்வராஜ் அவர்கள், தான் இதற்கு முன் குவாரியில் வேலை பார்த்தவன் என்றும், குவாரிகளால் அதிகம் பாதிக்கப்பட்டது மேலூர் பகுதி தான் எனக் கூறினார். குவாரி செயல்பாடு குறித்த சிறுகனிம விதிகள், 1959 ல் முறையான விதிமுறைகள் இருக்கின்றன. ஆனால் பெரும்பாலான குவாரிகள் அவற்றை கடைபிடிப்பதில்லை எனக் கூறினார். கருத்துக் கேட்பு கூட்டங்கள் பெயரளவில் தான் நடைபெறுகின்றன எனவும் கூறினார். குவாரி தொழில் மட்டுமின்றி வேலைவாய்ப்புக்கு பல மாற்று வழிகள் உள்ளன என்றும், ஊராட்சிகளுக்கு மத்திய, மாநில அரசுகள் பல நிதிகளை ஒதுக்கி வருகின்றது எனவும் கூறினார். குவாரிகளில் அதிர்வுகள் குறித்து கண்காணிக்கப்படுவதில்லை எனவும், குவாரி செயல்பாட்டினால் நிலநடுக்கம் ஏற்படுகிறது மற்றும் வெப்பம் அதிகரிக்கிறது எனவும் கூறினார். மேலும், குவாரிகளில் முறையாக கம்பி வேலிகள் மற்றும் பசுமை வளையம் அமைக்கப்படவில்லை என்றும், குவாரி செயல்பாடு குறித்து

தகவல் பலகைகள் ஏதும் வைக்கப்படுவதில்லை என்றும், விருதுநகர் மாவட்டத்தில் நூற்றுக்கும் அதிகமான குவாரிகள் அனுமதியின்றி இயங்குகின்றன எனவும், அதனால் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுவதாகவும் தெரிவித்தார். குவாரிகளை டிஜிட்டல் மற்றும் ட்ரோன் முறைகளில் ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்டார். மேலும், குவாரியானது சுற்றுச்சூழல் அனுமதிபெற சமர்ப்பிக்க வேண்டிய அனைத்து ஆவணங்களையும் சமர்ப்பிக்கவில்லை என்றும் கூறினார். மேலும், லாரிகளில் 10 டன் பாரத்திற்கு பதில் 90 டன் வரை கொண்டு செல்வதால், கிராம சாலைகள் பாதிப்படைவதுடன், காற்று மாசும் ஏற்படுவதாக கூறினார். மேலும், அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள காற்று மாசு ஆய்வு செய்த இடங்களில் பயன்படுத்தப்பட்ட மின்சார உபயோகம் குறித்த விபரங்கள் தேவை எனவும், கேட்டுக்கொண்டார். மேலும், 100 அடி அளவிற்கு குவாரி செய்ய சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில், அருகிலுள்ள கிணறுகள் 50 அடி ஆழமே உள்ளதால், கிணறுகள் வற்றிவிடும் நிலை ஏற்படும் எனவும், குவாரிகள் கட்டுப்படுத்த முறையில் ( Muffle) வெடி வெடிப்பதில்லை எனவும், நாணல் வெடிகளை உபயோகப்படுத்தவில்லை எனவும் கூறினார். சமர்ப்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கையில் தவறான விபரங்கள் தரப்பட்டுள்ளன என்றும், குவாரியை சுற்றியுள்ள பல வீடுகள் வரைபடத்தில் இல்லை என்றும் கூறினார். மாநில சுற்றுச்சூழல் ஆணையத்தின் Terms of Reference (ToR) ஆகஸ்ட், 2023 ல் பெறப்பட்ட நிலையில் ஆய்வுகள் மார்ச், 2023 முதல் மே,2023 வரை எவ்வாறு மேற்கொள்ளப்பட்டது என வினவினார். மக்கள் கருத்து கேட்பு கூட்டங்களை உள்ளூரிலேயே நடத்த வேண்டும் என கேட்டுக் கொண்டார். மேலும், குவாரியிலிருந்து 300 மீட்டருக்குள் நிரந்தர கட்டுமானங்கள் இருக்கக்கூடாது என்ற நிலையில், ஆய்வறிக்கையில் 300 மீட்டருக்குள் வீடுகள் உள்ளன என்றும், அருகில் உள்ள ஓடைக்கு 50 மீட்டருக்கு பதில் 10 மீட்டர் அளவே பாதுகாப்பு இடைவெளி விடப்பட்டுள்ளது என்றும் கூறினார். மேலும், மேற்சொன்ன விதிமீறல்கள் உள்ளதால், இக்குவாரிக்கு அனுமதி வழங்ககூடாது எனவும் கூறினார்.

திரு.N.வாசுதேவன், சுண்டக்கோட்டை:

திரு.வாசுதேவன் அவர்கள், தான் முன்னாள் பொம்மக்கோட்டை ஊராட்சி துணைத்தலைவர் மற்றும் சுண்டக்கோட்டை பகுதியில் உள்ள விவசாயி எனக் கூறினார். இக்குவாரியினால் பொம்மக்கோட்டை, காளையார் கரிசல்குளம், K.மீனாட்சிபுரம், முத்துராமலிங்கபுரம் மற்றும் கல்லூரணி பகுதியில் தூசி பரவி காற்று மாசு ஏற்பட வாய்ப்பு இருப்பதாகவும், இப்பகுதியில் உள்ள குவாரிகளில் வெடி வெடிப்பதால் பள்ளி மாணவ, மாணவிகள் படிப்பில் கவனம் செலுத்த முடியாத நிலை உள்ளதாகவும், அதனால் இக்குவாரிக்கு அனுமதி அளிக்கக் கூடாது எனவும் கேட்டுக்கொண்டார். அவர் மேலும் கூறுகையில் திருமதி.T.R.V பவித்ரா அவர்களின் குவாரி புல எண்.48-ல் செயல்படுவதாகவும், அதில் பசுமை அரண் ஏதும் அமைக்கப்படவில்லை எனவும். புல எண்.47-ல் அமைந்துள்ள தன்னுடைய தோட்டமானது தூசியினால் பாதிப்படைந்துள்ளதாகவும், இந்நிலையில் புல எண்.44-ல் குவாரி அனுமதித்தால் விவசாயம் பாதிப்படையும் எனக் கூறினார். மேலும், இப்பகுதியில் செயல்படும் T.R வ்ரதராஜன் (புல எண்.53&48) குவாரி, பாலசுப்பிரமணி (புல எண்.72) குவாரி, திருவாப்பு (புல எண்.64 முதல் 67) குவாரி, சுப்பாரெட்டியார் ( புல எண்.46) குவாரி, திரு.சுந்தரமூர்த்தி (புல எண்.29) குவாரி ஆகியவற்றால் தூசி பரவுவதாகவும், சக்தி வாய்ந்த வெடிகளை உபயோகிப்பதாகவும் கூறினார். மேலும், வெடி வெடிக்கும் போது வீடுகள் அதிர்வடைவதாகவும், புகை மண்டலம் பரவுவதாகவும், தெரிவித்ததோடு அக்குவாரிகளின் உரிமங்களை ரத்து செய்ய வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். மேலும், குவாரிகளின் செயல்பாட்டில் உருவாகும் வெடி உப்பு கலந்த நீரையும், குவாரியில் உருவாகும் கழிவு பொருட்களையும் புல எண்.33-ல் உள்ள கண்மாயில் விடுவதாகவும், அதனால் குடிநீர் தரம் பாதிப்படைவதாகவும், கண்மாயின் பரப்பளவு குறைவதாகவும் கூறினார். மேலும், நீர்ப்பிடிப்பு பகுதியில் சாலை அமைத்து ஆக்கிரமிப்பு செய்துள்ளதாகவும் தெரிவித்தார். ஆகவே, காலாவதியான மற்றும் புதிய குவாரிகளுக்கு அனுமதி அளிக்க கூடாதெனவும் கேட்டுக்கொண்டார்.

திரு.போத்திராஜ், கிருஷ்ணாபுரம்:

திரு.போத்திராஜ் அவர்கள் பேசுகையில், இந்த குவாரிக்கு அனுமதி அளிக்க கூடாது என்றால் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள அனைத்து குவாரிகளையும் மூட வேண்டும் எனக் கூறினார். தி/ள்.ராம்கோ நிறுவனத்தால் 500 ஏக்கர் பரப்பளவில் சுண்ணாம்புக்கல் சுரங்கம் அமைக்கப்பட்டுள்ளது என்றும், குவாரி அமைகின்ற காரணத்தினால் நிலத்தின் மதிப்பு கூடுகின்றது என்றும், ரோடு போடவும், கட்டுமான தொடர்பான அனைத்து வேலைகளுக்கும் குவாரி அவசியம் என்றும் கூறினார்.

திரு.விஜயராஜ், கஞ்சநாயக்கன்பட்டி:

திரு.விஜயராஜ் அவர்கள் தான் ஒரு விவசாய குடும்பத்தை சார்ந்தவன் என்றும், 10 ஏக்கர் நிலம் தனக்கு உள்ளதாகவும் தெரிவித்தார். 20 வருடங்களாக குவாரியில் டிரைவராக வேலை பார்த்து வருவதாகவும், குவாரி இல்லையென்றால் வாழ்வாதாரம் பாதிப்படையும் எனவும் கூறினார். குவாரிக்கு அனுமதி அளிக்கலாம் எனவும் கூறினார்.

திருமதி.G.விஜயலட்சுமி, பொம்மக்கோட்டை:

திருமதி. G.விஜயலட்சுமி அவர்கள் குவாரிகள் குறித்து எந்த புகார் மனு அளித்தாலும், அது குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனக் கூறினார். புல எண்.547 மற்றும் 548-ல் தனக்கு 5 ஏக்கர் நிலம் உள்ளதாகவும் ஆனால் குவாரியில் இருந்து வரும் தூசி மற்றும் கற்களினால் விவசாயம் பாதிப்படைகிறது எனவும் கூறினார். குவாரிக்கு செல்லும் லாரிகளால் பாதை பாதிப்படைகிறது என்றும், மதியம் 1 மணி, மாலை 6 மணி என அனைத்து நேரங்களிலும் வெடி வெடிக்கிறார்கள் என்றும், அதனால் வீடுகள் அதிர்வடைகின்றன என்றும், காற்று மாசு மற்றும் நீர் மாசு ஏற்படுகின்றன என்றும் கூறினார். குவாரிகளினால் மக்கள் பாதிப்படைவதாக தெரிவித்து, குவாரிக்கு அனுமதி வழங்கக் கூடாது எனவும் கேட்டுக்கொண்டார்.

**திரு.ஜோயல், காளையார் கரிசல்குளம்:**

திரு.ஜோயல் அவர்கள், கனிம வளம் அத்தியாவசியம் தான், ஆனால் விவசாயத்திற்கு தேவையான நீர்நிலைகள் சரிசெய்யப்படுவதில்லை எனக்கூறினார். பல ஊரணி மற்றும் கண்மாய்கள் தற்பொழுது முழுமையாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள நிலையில் அரசினால் அவற்றை மீட்க முடியவில்லை எனக் கூறினார். நாட்டிற்கு விவசாயமே முக்கியமானது எனக் கூறி குவாரிகளுக்கு விதிமுறைகளை கடுமையாக பரிசீலித்து அனுமதி வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

**திருமதி.கற்பகவள்ளி, சவ்வாஸ்புரம்:**

திருமதி.கற்பகவள்ளி, அவர்கள் தான் குவாரி உரிமையாளரின் தொழிற்சாலையில் வேலை பார்ப்பதாகவும், தனது தந்தை குவாரியில் வேலை பார்ப்பதாகவும், இவைகளே தங்களுக்கு வாழ்வாதாரம் எனவும் கூறினார். தொழிற்சாலை கொடுத்த வீடுகளில்தான் குடியிருப்பதாகவும் கூறினார். மேலும், தன்னுடைய தங்கையின் 25 ஏக்கர் நிலமானது, பந்தல்குடியில் குவாரிக்கு அருகில் இருப்பதாகவும், ஆனால் விவசாயத்திற்கு எந்தவித பாதிப்பும் இல்லை எனவும் கூறினார். குவாரிக்கு அனுமதி அளித்தால் நல்லது எனக் கேட்டுக்கொண்டார்.

இதன் பின்பு, இத்திட்டம் தொடர்பாக கருத்துக் கூற வேறு யாரும் முன்வராததால், வருவாய் கோட்டாட்சியர், அருப்புக்கோட்டை அவர்கள், மேலும் கருத்துகள் ஏதும் இருக்கிறதா என்று வினவினார். அதன் பின்பும் பொதுமக்களிடமிருந்து கருத்துகள் ஏதும் வரவில்லை. இறுதியில், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், விருதுநகர் அவர்கள் இதுவரை நடந்ததை தொகுத்துக் கூறி கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார். மேலும், எழுத்துப் பூர்வமான கருத்துக்கள்/மனுக்கள் ஏதும் இருப்பினும் வழங்கலாம் எனத் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து, எழுத்துப்பூர்வமாக 62 மனுக்கள் பெறப்பட்டன.

அத்துடன் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நிறைவுபெற்றது.

மாவட்டசுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடுமாசுகட்டுப்பாடுவாரியம்,
விருதுநகர்

வருவாய் கோட்டாட்சியர்,
அருப்புக்கோட்டை,
விருதுநகர் மாவட்டம்.

இணைப்புகள்:

1. வருகைப்பதிவேடுநகல் (மொத்தம் - 7 பக்கங்கள், 87 நபர்கள்)
2. பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் வீடியோ (ஒலி மற்றும் ஒளி) பதிவு.
3. பத்திரிக்கைச் செய்தி நகல்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).